VIII. GOVERNMENT BILLS

(1) *The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1970 (L. A. Bill No. 21 of 1970)*

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்ட மன்றப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ் நாடு 1970-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாவது திருத்த) மசோதாவை* (சட்ட மன்றப் பேரவை மசோதா 21/1970) பரிவுரைகள் வழங்குவதற்காக இம்மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டு மென்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் 21-வது இனத்தின் கீழ் குறிக்கப்பட் டுள்ளவை இரசாயன உரப்பொருள்களாகப் பயன்படும்பொழுது ஒரு முனை வரியாகவும் இரசாயன உரப்பொருளாகவன்றி வேறுவிதத்தில் பயன்படும்பொழுது பல முனை வரியாகவும் தற்போது விதிக்கப்படு கின்றன. இதனால் வணிகருக்கு இடர்ப்பாடு ஏற்படுகிறது. மசோதா வில் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தின்படி ''இரசாயன உரம்'' என்ற சொற்கள் 21-வது இனத்திலிருந்து நீக்கப்படுவதால் இந்த இடர்ப்பாடு அகற்றப்படுகிறது.

மேலும், 1957-ஆம் ஆண்டு உரக்கட்டுப்பாடு ஆணையில் குறிப்பிட் டுள்ள சில உரங்கள் தற்போதுள்ள 21-வது இனத்தில் குறிப்பிடப் படவில்லை. உரக்கட்டுப்பாடு ஆணையில் குறிப்பிட்டுள்ள எல்லா இனங் களையும் 21-வது இனத்தின் கீழ் விவரிப்பதற்கு இம்மசோதா வகை செய்கிறது.

தற்போது, முதல் விவர அட்டவணையின் 21-வது இனத்தில் 1 முதல் 15 இனங்களில் குறிக்கப்பட்டுள்ள இரசாயன எரு இனங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இனங்களையும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை எருவினங்களையும் கலந்த எருக்கலவை, அக்கலவையில் சேர்ந்த சில இனங்களுக்கு ஏற்கெனவே வரி விதிக்கப் பட்டிருந்தபோதிலும், ஒரு தனிப்பட்ட இனமாகக் கருதப்பட்டு, $3\frac{1}{2}$ சதவீதத்தில் ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. இவ்வாறாக இரட்டிப்பு வரி விதிப்புக்குள்ளாகிறது. ஆனால் இம்மசோதா எருக்கலவை தயாரிப்பாளர்கள் அக்கலவையில் உள்ள ஏற்கெனவே வரி விதிப்புக் குள்ளான இனங்களின் மீது மறுபடியும் வரி செலுத்தாமலிருப்பதற்கு வகை செய்கிறது. இது எருக்கலவை தயாரிப்பாளருக்கு அளிக்கப்படும் சலுகையாதலால், வாணிபம் இதை வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த மாற்றங்கள் மேற்படிச் சட்டத்தில் 59-வது பிரிவு (1)வது உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் 1970 ஆகஸ்ட் 6-ம் நாள் முதற்கொண்டு செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. 59-வது பிரிவைச் சேர்ந்த (2) வது உட்பிரிவின் கீழ் மேற்குறிப்பிட்ட அறிவிப்புக்குப் பதிலாக மசோதா ஒன்றைத் தற்போதைய சட்ட மன்ற கூட்டத்தொடரில் கொண்டுவர வேண்டும்.

சட்டமன்ற மேலவை முன் இப்போது வைக்கப்பட்டுள்ள இம்மசோதா இது குறித்த அவசியமான விதித்துறைகளைக் கொண்டுள்ளது. இம் மசோதாவை ஏற்குமாறு மேலவையை நான் கேட்டுக்கொள்கிறேன்.

* Printed as Appendix II.

[9th September 1970

DEPUTY CHAIRMAN : Motion moved—

"That the Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 21 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

*THIRU A. R. DAMODARAN : Sir, I just want a clarification from the Hon. the Minister for Food and Commercial Taxes. In item 22, it has been stated "any mixture of two or more articles mentioned in items 1 to 21 above with or without the addition of other articles, on the turn-over relating to the components thereof, which have not already suffered tax" Now, Sir, straight chemicals like urea are obtained in our State. We also get it from other States where no sort of sales tax is levied on urea and if this urea is purchased and utilised in mixtures in our State, then it is liable to tax. My only point is that under the Constitution certain articles have been declared to be of inter-State importance and urea may also be one of these substances, in which case it may not be possible for our State to levy sales tax on the urea that is imported from other States, if sales tax has already been imposed in that State. I would like to have a clarification whether in such cases this would apply to them or whether it would be limited to the amount of 3 per cent tax which comes under the Central Sales Tax Act.

<u>மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம்</u> : தலைவர் அவர்களே, இரண்டு உரப்பொருள்களை ஒன்றாகக் கலந்து கலவை செய்து விற்கிறார்கள். இரண்டு பொருள்களுக்கும் வரி உண்டு என்று சொன்னாலும், ஒரு பொருளுக்கு ஏற்கெனவே வரி போட்டிருந்தால், கலவையானதற்குப் பிறகு அதற்கு வரி போடவேண்டாம் என்று இருக்கிறது. அதற்கும் வரி போடவேண்டிய அவசியம் இருந்தால் போட வேண்டியிருக்கும். இப்படி உரக்கலவைக்குச் சலுகை கொடுப்பதால் விலைகள் குறைவாக விற்க வசதியேற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1970 (L.A. Bill No. 21 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations."

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

DEPUTY CHAIRMAN : There are no recommendations to clauses 2 and 1, the Long Title, and the Enacting Formula. So, the Bill will be returned to the Assembly without any recommendations.